This question paper contains 2 printed pages]

**Roll No.** | | | | | | | | | | | |

S. No. of Question Paper : **5223**

Unique Paper Code : **208361** **G**

Name of the Paper : **Journalistic Writing and Translation**

Name of the Course : **B.A. (Prog.) Tamil-A**

Semester : **III**

Duration : **3 Hours** Maximum Marks : **75**

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

I.

1. செய்தி என்றால் என்ன? பத்திரிகையில் செய்தி அமையும் விதத்தை விளக்குக. 10

(அல்லது)

'புதுதில்லி, செப்டம்பர், 11-ஆம் தேதி தில்லிப் பல்கலைக்கழக மாணவர் தேர்தல் நடைபெற்றது ' இத்தலைப்பில் ஒரு செய்திக்கதை தயாரிக்க.

2. அறிக்கை என்றால் என்ன? அறிக்கையின் வகைப்பாட்டை விவரிக்க. 10

(அல்லது)

உங்கள் கல்லூரியில் நடந்த மாணவர்களின் விளையாட்டுப் போட்டி குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

3. ஒரு பத்திரிகையில் சிறப்புக் கட்டுரை (Feature writing) அமையும் விதம் குறித்து விவரிக்க. 10

(அல்லது)

2015-ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தினம் குறித்து ஒரு சிறப்புக் கட்டுரை எழுதுக.

4. பத்திக் கட்டுரை என்றால் என்ன? அதன் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

'இன்றைய கல்வி நிலை' குறித்து ஒரு பத்திக் கட்டுரை வரைக.

5. தலையங்கத்தின் உருவம் மற்றும் உள்ளடக்கம் குறித்து விவரிக்க. 10

(அல்லது)

'தமிழகத்தில் வெள்ளப்பெருக்கு' என்னும் தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதுக.

II.

*1. கீழ்வரும் பத்தியைத் தமிழில் மொழிபெயர்க்க:* *10*

In 1801, Madurai came under the direct control of the British East India Company and was annexed to the Madras Presidency. The British government made donations to the Meenakshi temple and participated in the Hindu festivals during the early part of their rule. The city evolved as a political and industrial complex through the 19th and 20th centuries to become a district headquarters of a larger Madurai district. In 1837, the fortifications around the temple were demolished by the British. The moat was drained and the debris was used to construct new streets. The city was constituted as a municipality in 1866.

*2. கீழ்வரும் பத்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க:* *10*

*சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களை நாட்டுப்புறப் பாடல்களுக்கு ஒப்பிடலாம். அதைப்போல சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெரும் காப்பியங்களை நாட்டுப்புறக் கதைப்பாடல்களுக்கு ஒப்பிடலாம். நாட்டுப்புறப் பாடல்கள் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவே இருக்க, கதைப்பாடல்கள் சமூக உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பாடல்களாகக் காணப்படுகின்றன. காப்பியங்களுக்கு இருக்கும் நாட்டு வருணனை, நகர வருணனை, தலைவன் வருணனை, தலைவி வருணனை முதலியவை கதைப்பாடலுக்கும் உண்டு. இத்தகைய நாட்டுப்புறக் கதைப்பாடல்களே காப்பியங்களுக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும்.*

*3. கீழ்வரும் கேள்விப் பதிலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க:* *5*

*தமிழகத்தில் இந்த ஆண்டு மழை நிலவரம் எப்படி?*

*சராசரி அளவை விடக் குறைவுதான்.*

*தமிழகத்திலுள்ள விளைநிலங்களின் நிலை என்ன?*

*விளைநிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாறிவருகின்றன.*